**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**நான்காம் வருட/முதலாம் அரையாண்டுச் சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)**

**HCS 4101 The Saiva Siddhanta**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

1. "அளவை காண்டல் கருதல் உரை என்றிம் மூன்றிலடங்குமே" - சிவஞான சித்தியார் மேற்குறிப்பிட்ட பாடலடியினைத் துணைக்கொண்டு பிரமாணங்கள் தொடர்பான சைவசித்தாந்திகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துக.

2. சைவசித்தாந்தத்தின் பசுக்கொள்கை தொடர்பில் மேல்வரும் சிவஞானபோதப் பாடலடிகளை நுணுகி ஆராய்க.

   அ. அமைச்சரசேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே
   ஆ. இருதிறனறிவுள திரண்டலா தான்மா

3. "பேறிழ வின்பம் பிணிமூப்புச் சாக்காடு இவ்
   வாறும் முன் கருவுட்பட்டது...." – சிவஞான சித்தியார்

   மேற்குறிப்பிட்ட பாடலடியினை சைவசித்தாந்திகளின் வினைக் கொள்கை தொடர்பில் உமக்குள்ள அறிவைத் துணைக் கொண்டு விளக்குக.

4. சைவசித்தாந்த வரலாற்றில் மேல்வருவன பெறுகின்ற முக்கியத்துவத்தினைப் பரிசீலனை செய்க.
   அ. வேதங்கள்
   ஆ. சிவாகமங்கள்

5. "வட இந்தியச் சைவசித்தாந்த மரபில் அட்டப்பிரகரண நூல்கள் தனித்துவமானவை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

6. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக.

   அ. சிவஞானமுனிவர்
   ஆ. திருவாசகத்தில் பதிக் கொள்கை
   இ. ஞானாமிர்தம்
   ஈ. சக்திதத்துவம்